உ

"சுவாமியே சரணம் ஐயப்பா"



புங்குடுதீவு - கிழக்கு வல்லன்

ஸ்ரீமத் பூரணை புஷ்கலை சமேத

அரிகர புத்திர ஐயனார்

# திருஊஞ்சல்

இயற்றியவர்.

கவிமாமணி, முத்தமிழ் வாரிதி, ஸாகித்திய சிரோமணி,
ஸாகித்திய மாமணி, ஸாகித்திய சாகரம்,
ஸாகித்திய லகரி.

யாழ்ப்பாணம் மா. த. ந. வீரமணிஐயர் அவர்கள்

இஃது

ஷை தேவஸ்தானத்தாரால்
வெளியிடப் பெற்றது.

விபவ ஆண்டு, தைத்திங்கள், 9ம் நாள்

22 - 1 - 1989

உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஆதீன முதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய

# ஆசியுரை

சைவ அருட் பெருந்தகையீர்

பொன்கொடுதீவு வல்லன் ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் பெருமானுக்கு யாத்துள்ள திருவூஞ்சல் பாப் பிரதியைக் கண்ணுற்றோம் அருமையான கைங்கரியம். தேவாசுரர் மூவா மருந்தும் மற்றும் இணையில்லாச் செல்வங்களும் வேண்டி பாற்கடல் கடைந்த ஞான்று புருஷசக்தியும் காத்தற் கடவுளுமான ஸ்ரீ விஷ்ணுபரமாத்மா அமிர்தம் பகிர்ந்தளிக்க மோஹினி அவதாரம் எடுத்தருளினார். அவ்வேளை அவருக்கும் சிவபரம் பொருளுக்கும் உதித்த காரணத்தினால் ஹரிஹர புத்திரரானார். பேரருளாளர்கட்குப் பிறந்த பிள்ளைக்கும் பெருமதிப்பு உண்டு. இது இயற்கை. எனவே எமக்கு இனிப் பிறப்பின்மை முக்தி இன்பம் வேண்டி அவரை ஆனந்தமாக இருக்க ஊஞ்சலாட்டி மகிழவைப்பின் எம்மையும் இம்மையில் இன்புற்றிருக்க அருள்பாலிப்பர் என்பது திண்ணம் இதற்கு இசையின்பம் வேண்டற்பாலது. அதனைக் கவிமாமணி பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார். அவர் அருட்கவி. அவர்கள் யாத்திருக்கும் இவ்வூஞ்சல் பாக்களிலெல்லாம் பக்திரசம், பொருள்நயம். தத்துவார்த்தங்கள், புராணக்குறிப்பு ஆகியன பொதிந்து மிளிர்வதை ஆய்ந்துணரலாம்

ஐயனார் அடியார்கள் நலமே நீடுவாழ்க

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
இந்து நாகரிகத் துறைத் தலைவர்

## கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் வழங்கிய

# அணிந்துரை

யாழ்ப்பாணத்திலே திகழும் திருக்கோயில்களின் வரிசையில் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகளுடன் ஐயனார் கோயில்களும் விளங்குகின்றன. இங்குள்ள ஐயனார் கோயில்கள் பற்றியும் ஐயனார் வழிபாடு, ஐதிகம் , வழிபாட்டின் பலன்கள் போன்றவற்றைப் பற்றியும் கூறும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட ஐயனார் கோவில்களில் ஒன்றாக விளங்குவது புங்குடுதீவு கிழக்கு வல்லன் ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் கோயில் ஆகும் இங்கு. எழுந்தருளி அருள்சுரக்கும் ஐயனாருக்குரிய திருவூஞ்சல் நூல் வடிவாக வெளிவருகின்றமை எமக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. திருவூஞ்சற் பாடல்கள் இறைவனை நைமித்திய காலங்களில் வழிபடுவதற்குப் பெரிதும் துணைபுரிவன இவற்றை உரிய இராகத்துடன் இசைபெருக்கிப் பாடும் பொழுது கேட்போர் உள்ளம் இறைவன் வயப்படுவதாகும்.

இந்நூலின் ஆசிரியர் இயலிசை வாரிதி, ஸாகித்ய சிரோமணி யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர் அவர்கள். இவர் இயல்பாகவே கவிதை பாடும் ஆற்றல் படைத்தவர். சாகித்தியங்கள் இயற்றுவதில் இவருக்குள்ள ஆற்றலின் பயனாய் பல்வேறு விருதுகள் இவரை நாடி வந்துள்ளன. அவையாவும் அவரது திறனுக்குரிய சான்றுகள் இத்துறை சார்ந்த இவரது திறமை ஈழத்தில் மாத்திரமல்லாது தமிழகத்திலும் பாராட்டப்பெற்றது. ''ஸாகித்திய சாகரம்'' என்ற விருதுப்பெயர் இவருக்குச் சாலவும் பொருத்தமானது, இலங்கையில் உள்ள ஸாகித்ய கர்த்தருள் வீரமணிஐயர் அவர்கள் முன்னனி வகிப்பவர், அவரது கைங்கரியத்தின் பயனாய் உருவாகிய இந்நூல், கணபதிகாப்பு, ஊஞ்சல் பாடல்கள் (11). வாழி, எச்சரிக்கை (4), பராக்கு (4) லாலி (2) கப்பற்பாடல். மங்களம் ஆகியவற்றைத் தாங்கி வருகின்றது, பக்திநயம் இசைநயம், சமய தத்துவம் பொருட் செறிவு இப்பாடல்களில் பொதிந்துள்ளன. ஐயப்பனை ஒவ்வொரு ஊஞ்சற் பாடல்களிலும் வேறு பெயர்களைக் கொண்டு ஐயப்பா என விழித்துப் பாடியுள்ள சிறப்பு மனங்கொள்ளத் தக்கது, ஊஞ்சற் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஏழாம் வரி பூங்குடியின் வளர்ச்சிச் சிறப்பினை எடுத்துக் கூறும் அடைமொழிகளைக் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்களில் பயபக்தி பஞ்சபுலனடக்கம்; ஐயப்பனின் தோற்றப் பொலிவு, அலங்காரச் சிறப்பு அவதார மகிமை, மகர ஜோதி சிறப்பு, போன்றவை எடுத்துக் கூறப்பட்டுள்ளன. உயர்ந்த தத்துவ சிந்தனைகளும் ஆங்காங்கே இழையோடி நிற்கின்றன.

ஊஞ்சற்பாடல்களில் ஒன்பதாம் பாடலில் கிழமைகளின் பெயர்களை வைத்துப் பாடிய சிறப்பு காணப்படுகிறது. வேதத்தின் உட்பொருளாம் தர்மசாஸ்தாவாகிய ஐயப்பனுக்குரிய இத் திரு ஊஞ்சற் பாடல்கள் படிப்பவர் உள்ளத்திலே பக்தியுணர்வை வளர்ப் பன. இப்பாடல்களிற் சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றுடன் தத்துவக் கருத்துக்களும் இழையோடி நிற்கின்றன கப்பற் பாட் டிலே பொருளுக்கேற்ற ஓசை நயம் அணிசெய்கின்றது. இதில் பவசாகரம் பற்றிய உயர்ந்த தத்துவ சிந்தனையைக் காண்கிறோம்.

இத்தகைய பொருள்நயம், ஓசைநயம், 'சமய தத்துவ சிந் தனைகள் ஆகியவற்றைக் கொண்ட சிறந்த திருவூஞ்சற் பாடல் களைப் பாடிய இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் மேன்மேலும் இத்தகைய கைங்கரியங்களில் சிறப்புற திருப்பூங்குடி வல்லன் பதி ஐயப்பனின் திருவருள் பொலிவாகுக.

பூங்குடி வல்லன்பதி ஐயப்பனுக்குரிய இத்திருவூஞ்சலை நூல் வடிவில் வெளியிட முன்வந்த அன்பர்கள் அனைவருக்கும் ஐயப் பனின் திருவருள் என்றென்றும் கிட்டுவதாகுக.

உ

சிவமயம்

(சுன்னுகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானப்பிரதமருகு)

முத்தமிழ்க் குருமணி. சகலாகம சங்கிரகர்

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

ஆன்மகோடிகளின மனம் வாக்கு காயங்களின் நிலைப் பாட்டை உள்நின்று ஆட்டுவித்து மலபந்தம் நீக்கி பேரின்ப நிலைக்காக்கி அருள்புரியும் இறைவன் திருநடனமே நாம் காணும் பிறவிப்பேருகும். இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்று வரும்பலனும் அதுவேயாம். படைத்து, காத்து, அழித்து, மறைத்து, உலகமுய்ய அருள்செய்யுமுன் இறைமைசெய் யும் திருநடனமே திருஊஞ்சலாகும். இதுவே உற்சவகாலங்களிலே டோலோற்சவமெனச் சிறப்பானதாகும். சர்வலோக தயாபரனை சிவனுக்கும், காத்தல் தெய்வமான விஷ்ணுவுக்கும் உதித்த பக்த தெய்வத்திரயரான அரிஹரசாஸ்தாவின் திருவூஞ்சல் நடைபெறு வதும், பாடுவதும், பாராயணஞ் செய்வதும் மேன்மையானதாகும். கவிமாமணி ந. விரமணி ஐயாவின் பக்திச்சுவையும் கீதமுறையும், பொருட்செறிவும் நிறைந்த பாடல்கள் இறையருளை ஊட்டுவதாக உள்ளது. இப்புனித கைங்கரியத்தை தொகுத்து வழங்கும் அரி ஹரபுத்திர தேவஸ்தானத்தார், சைவப்பெருமக்கள், அனைவரும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு பெற்றுவாழப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேம். சுபம்.

உ

''சுவாமியே சரணம் ஐயப்பா''

புங்குடுதீவு - கிழக்கு, வல்லன்

# ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனூர்

# திருவூஞ்சல்

## காப்பு

வெண்முத்தப் பந்தாடும் திரைகள் சூழும்
வியன் பதியாம் பூங்குடியின் கீழ்த்தி சையில்
பண்நித்தம் பக்தியொடு பாடிப் ப்க்தர்
பரவிடும் ஹரிகர சுதனு மான
விண்முத்திப் பேரருளின் வடிவை யப்பன்
விளங்கு தமிழ் ஊஞ்சலிலே மகிந்தே யாட
கண்ணெனுத்த மடத்துவெளிக் கணப தியின்
கழலிணைகள் என்றென்றும் காப்ப தாமே.

## நூல்

சீதளபொற் கால்நான்கும் வேத மாகச்
சிவாகமமவை காசனமே விட்ட மாக
நீதமுறு கலைஞானம் வடங்க ளாக
நெடும் பத்மப் பிரணவமே பீட மாகப்
பூதலத்தில் பூந்தமிழின் ஊஞ்சல் வைகிப்
பூரித்து நல்லருளைப் புவிக்கு நல்கும்
மாதலமாம் பூங்குடியின் வல்லன் மேவும்
மணிகண்டன் ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 1

பயபத்தி எனும்பவளத் தூண்நி றுத்திப்
பஞ்சபுலன் சேர்த்தொன்றாய் விட்ட மாக்கி
வயமான நாற்கரண வடங்கள் மாட்டி
வளமேவு திருவருளாம் பலகை தேக்கி
நயமாக ஜீவாத்மா முத்தி யூஞ்சல்
நலமாக ஆடருள்செய் ஐய னுரே!
கயல்சூழும் பூங்குடியின் வல்லன் மேவும்
காவலனே ஐபப்பா ஆடீர் ஊஞ்சல். 2

கோலமா மணிகுயிற்றும் கிரீட மாடக்
குலவிடுசெக் கர்மேனிக் குஞ்சி யாட
வேலயிற்கூர்ப் பூமலரின் விழிக ளாட
விளங்குதிருக் கரமதிலே செண்டு மாட
காலிடையில் யோகவட வார மாடக்
கருணைபொழி திருவதன முறுவ லாடச்
சீலமிகு பூங்குடியின் வல்லன் மேவும்
சபரீசா ஐயப்பா ஆடீர் ஊஞ்சல் 3

செண்டாடத் தண்டாடத் திலக மாடச்
செம்பவள இதழாட முறுவ லாட
வண்டாட வாசமலர் மாலை யாட
வளர்மார்பில் புரிநூலும் இசைந்தே யாட
கண்டாரின் உள்ளமதைக் காந்தம் போலக்
கருணையினால் இழுத்தருளைப் பொழியும் தேவா
விண்டாரைப் பூங்குடியின் வல்லன் மேவும்
வீரமணி ஐயப்பா ஆடீர் ஊஞ்சல் 4

தாரணியில் தரங்கஅலை ஆட ஆடத்
தழலாடப் புனலாட வளியு மாடக்
காரணியாம் நிலமாட வெளியு மாடக்
கழலாடப் பிரபஞ்சம் களித்தே ஆடப்
பூரணைபுட் கலையாடப் புவனி யாடப்
பூமாதும் நாமாதும் புகழ்ந்தே ஆடச்
சீரணிசேர் பூங்குடியின் வல்லன் மேவும்
சத்தியனே ஐயப்பா ஆடீர் ஊஞ்சல் 5

அரனுட உமையாட அரியு மாட
அண்டசரா சரமனைத்தும் அருளால் ஆடப்
பிரமாவும் இந்திரனும் தேவ ராடப்
பெறற்கரிய பேறனவே பக்தர் கண்டே
சிரமேவும் கரமாட விழிநீ ராடச்
செவ்வுளமும் நெக்குருகிக் கசிந்தே ஆடப்
புரமான பூங்குடியின் வல்லன் மேவும்
புலியூர்தி ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 6

பண்டொருநாள் சுராசுரரும் அமுதம் வேண்டிப்
பாற்கடலைக் கடைந்திடவே அரக்கர் வெம்மை
கண்டஅரி மோகினியால் அரக்கன் ஆவி
கனற்பொடியாய் வதைசெய்யக் கைலை நாதன்
கண்டகியாம் நதியருகே அச்ச நீழல்
காதலரி யோடருள உதித்த தீரா!
தண்டமிழின் பூங்குடியின் வல்லன் மேவும்
தண்டேந்தும் ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 7

வெம்புலியின் பால்வேண்டி அன்னை கேட்க
வீரத்தின் புலியமர்ந்து வேங்கை சூழ
அம்புலியில் வலம்வந்த மகர ஜோதி
ஆனந்த ரூபனே தர்ம சாஸ்தா!
நம்புமடி யவர்க்கருளும் ஆத்மா நந்தா
நல்லடியார் சத்துருசங் காரன் நீயே
சங்குவளர் பூங்கொடியின் வல்லன் மேவும்
சங்கீதா ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 8

வெண்திங்கள் குடைபிடிக்க செவ்வாய்க் கன்னி
விளங்குரதி மதன்கரும்பு தன்னை ஏந்தப்
பண்பொங்கும் கலைச்செல்வி யாழங்போடு
பாடவெள்ளிக் கஜாசனம் ஆசனித்தே
விண்தங்கும் ஞாயிறுபல் கோடி ரூபன்
வேதத்தின் உட்பொருளாம் தர்ம ஸாஸ்தா
மண்பொங்கும் பூங்குடியின் வல்லன் மேவும்
மணிகண்டன் ஐயப்பா ஆடீர் ஊஞ்சல் 9

ஹரிஹர புத்திரரே ஆடீர் ஊஞ்சல்
ஆபத் பாந்தவனே ஆடீர் ஊஞ்சல்
பதினெட்டாம் படித்தேவா ஆடீர் ஊஞ்சல்
பந்தளத்தில் அவதரித்தோய் ஆடீர் ஊஞ்சல்
வரிப்புலியின் வாகனத்தோய் ஆடீர் ஊஞ்சல்
வளர் செண்டின் தளிர்கரத்தோய் ஆடீர் ஊஞ்சல்
விரிகடல்சூழ் பூங்கொடியின் வல்லன் மேவும்
வில்வீரா ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 10

சபரிமலை வாழ்பவனே ஆடீர் ஊஞ்சல்
சரபவடம் பூண்பவனே ஆடீர் ஊஞ்சல்
அபரிமித அருள்பொழிவாய் ஆடீர் ஊஞ்சல்
ஆனந்த ரூபனே ஆடீர் ஊஞ்சல்
தவரிஷிகள் துதிப்பவனே ஆடீர் ஊஞ்சல்
தண்டேந்தும் செங்கரத்தோய் ஆடீர் ஊஞ்சல்
கவரியதப் பூங்குடியின் வல்லன் மேவும்
ஹரிஹரனே ஐயப்பா ஆடீர் ஊஞ்சல். 11

## வாழி

வான்மழை வாழிவாழி! வளமும் வாழி
வளர்ந்தோங்கு செழுங்கலைகள் வாழி வாழி
கோன்ஓச்சும் செங்கோலும் நிமிர்ந்தே வாழி
கொஞ்சுதமிழ் குவலயத்தில் மிஞ்சி வாழி
தேன்போல இனித்திடவே செகத்தோர் வாழி
தெய்வநெறி நான்மறையும் திகழ்ந்தே வாழி
மேன்மைமிகு பூங்குடியும் வல்லன் வாழி
மாமணியாம் ஐயப்பன் வாழி வாழி.!! 12

## எச்சரீக்கை

சபரிமலைக் காசேமணி கண்டாஎச்ச ரீக்கை
சகலாகமம் போற்றும்தர்ம ஸாஸ்தா எச்ச ரீக்கை
தவமாய்யோக வடம்பூண்டிடும் தேவாஎச்ச ரீக்கை
தண்டாயுதம் தரித்ததிரு செண்டோய் எச்ச ரீக்கை. 1

அரமாலவன் சுதனேஹரி ஹரனேஎச்ச ரீக்கை
அபயம்தரும் அமலாதிப குருவேஎச்ச ரீக்கை
புரப்பூங்குடி வல்லன்வளர் ஐயன்எச்ச ரீக்கை
புலிவாகனு பதினெட்டெழில் பதியோய் எச்சரீக்கை. 2

திருப்பூரணை மகிழ்புட்கலை நாதாஎச்ச ரீக்கை
திகழ்பந்தனம் உதித்தோய்சப ரீசாஎச்ச ரீக்கை
திருப்பூங்குடி வல்லன்பதித் தேவாஎச்ச ரீக்கை
திருமாலரன் சுதனேபம்பை வாசாஎச்ச ரீக்கை. 3

ஏகாந்தனே யோகதண்ட மூர்த்திஎச்ச ரீக்கை
எழிலாணைமேல் இவர்ந்தேவரும் நாதாஎச்ச ரீக்கை
யோகானந்தப் பரமானந்த ரூபாஎச்ச ரீக்கை
மோகனுங்கி சுதனேஹரி ஹரனேஎச்ச ரீக்கை, 4

## பராக்கு

காந்தமலைச் சோதியே ஸ்வாமி பராக்கு
கர்ப்பூரப் பிரியனே கருணு பராக்கு
பூங்குடி வல்லனே புனிதா பராக்கு
பூசுர ரட்சகா பூர்ணு பராக்கு. 1

சாந்தாஸ் வரூபா சுகுணு பராக்கு
சபரி கிரீசா சாஸ்தா பராக்கு
பூந்தளிர்த் துளசிப் பிரியோய் பராக்கு
புலிவா கனனே சரணு பராக்கு. 2

மகர ஜோதி மதனு பராக்கு
மணிகண் டக்குரு மணியே பராக்கு
சிகரச் சபரி மலையோய் பராக்கு
சிவனரி சுதனே சீலா பராக்கு. 3

பக்தருக் கிரங்கும் பரனே பராக்கு
பரம தயாளா குருவே பராக்கு
சத்துரு நாசம் செய்வோய் பராக்கு
சால்புடைப் பூங்குடி வல்லனே பராக்கு. 4

## லாலி

வல்லவன்வாழ் ஐயனுர்க்கு லாலி சுப லாலி
வரதக்கை நாயகர்க்கு லாலி சுப லாலி
வில்லம்பு தொடுத்தவர்க்கு லாலி சுப லாலி
வேங்கைப்புலி இவர்ந்தோர்க்கு லாலி சுப லாலி
நல்லருள் செய்பவர்க்கு லாலி சுப லாலி
நாதகீதப் பிரியருக்கு லாலி சுப லாலி
வல்லம்மை அருள்பவர்க்கு லாலி சுப லாலி
வாரண வாகனர்க்கு லாலி சுப லாலி. 1

சத்துரு சங்காரர்க்கு லாலி சுப லாலி
சாஸ்தா மணிகண்டர்க்கு லாலி சுப லாலி
பக்தர் சஹாயனுக்கு லாலி சுப லாலி
பாக்கியம் அருள்பவர்க்கு லாலி சுப லாலி
சித்துநிறை நாயகர்க்கு லாலி சுப லாலி
சிவனரி புத்திரர்க்கு லாலி சுப லாலி
அத்துவிதங் கடந்தவர்க்கு லாலி சுப லாலி
அய்யப்ப சுவாமிக்கு லாலி சுப லாலி. 2

# கப்பற்பாடல்

ராகம்:- புன்னுகவாராளி தாளம்:- ஆதி

ஏலேயா - தத்தெய்யா - ஏலோவலி

ஐம்பூதப் பலகைதனை அழகாகச் சேர்த்தே
ஆனந்தக் கப்பல்தனை ஆத்மாவும் கட்டி
பஞ்சாக்ஷ ரச்சரக்கைப் பக்குவமாய் ஏத்திப்
பரமாத்ம தத்துவமாம் பாய்மரம் நாட்டி
அஞ்சாமல் நாற்கரணப் பாய்கயிறு மாட்டி
ஆன்மீக நெறியான பாய்கள் விரித்தே
துஞ்சாமல் வைராக்ய அஞ்சான் பிடித்தே
துணையாக நால்மார்க்கப் பக்திவடம் இணைத்தே
பிரம ரேந்திர அணிசத்தைப் பார்த்தே
பஞ்சபுலன் சுக்கானைப் பதருமல் பிடித்தே
தலமான வல்லன்கடற் கரையோரம் வாழும்
தண்டேந்திச் செண்டேந்தித் தண்ணருளை நல்கும்
பெலமான ஐயனரைப் பூம்பாத முத்திப்
பேரின்பக் கரைசேரப் போகுதடா கப்பல்!

ஏலேயா - தத்தெய்யா - ஏலோவலி

பஞ்சமா பாதகம் தள்ளடா தள்ளு
பரமாத்து வத்திலே தள்ளடா தள்ளு
நெஞ்சிலே வஞ்சமதைத் தள்ளடா தள்ளு
நிறைந்தபே ரின்பத்துள் தள்ளடா தள்ளு

ஏலேயா - தத்தெய்யா - ஏலோவலி

பவசாகரம் கடக்கப் போகுதடா கப்பல்
பவமுத்திக் கரைசேரப் போகுதடா கப்பல்
உவமானம் சொல்லவொணு உயர்சீவன் முத்தர்
உன்னதக் கரைசேரப் போகுதடா கப்பல்



## சரணம் ஐயப்பா

ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா;
மோகினி பாலனே ...
வன்புலி வாகனனே ...
சபரிமலே வாசனே ...
இருமுடிப் பிரியனே ...
எங்கள் குல தெய்வமே ...
நெய் அபிசேகப் பிரியனே ...
சேவிப்பவர்க்கு ஆனந்தனே ...
கண்கண்ட தெய்வமே ...
இஷ்ட வரம் தருபவனே ...
சற்குரு நாதனே ...
கன்னிமலேக் காரர்களேக் காப்பவனே ...
கர்ப்பூரப் பிரியனே ...
தக்ஷிணுமூர்த்தி ஸ்வரூபனே ...
காந்தமலே ஜோதியே ...
பம்பா வாசனே ...
அன்னதானப் பிரபுவே ...
கன்னிமூலே கணபதியே ...
மாளிகைப் புரத்தம்மா தேவிமஞ்ச மாதாவே
ஆரியங்காவி லேயனே ...
எருமேலி தர்மசாஸ்தாவே ...
ஜாதிபேத மில்லாதவனே ...
பராசக்தி பாலனே ...
குளத்தூரில் குடிகொள்ளும் பாலனேசரணம் ஐயப்பா

சகலகுற்றங்களேயும் ।ன்னித்து காத்தருள வேண்டும். தத்தியமான பொன்னு பதினெட்டாம் படிமேல் வாழும் ஸ்ரீ ஹரஹரசுதன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா!

சுவாமியே சரணம் ஐயப்பா!

ஸ்ரீ வாலாம்பிகா அச்சகம், 614, கே. கே. எஸ், வீதி யாழ்ப்பாணம்